# இணைப்பு - 2.3

## 28.4.98 அன்று மாலை 3 மணி அளவில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதல்நிலைக் குழுவின் மூன்றாவது கூட்ட நடவடிக்கை குறிப்பு.

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்குவது குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட முதல் நிலைக் குழுவின் மூன்றாவது கூட்டம் 28.4.98 அன்று மாலை 3 மணியளவில் தலைமைச் செயலகம், பிரதானக் கட்டிடத்திலுள்ள கூட்ட அறையில் மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) மற்றும் குழுவின் அமைப்பாளர் திரு.கோ.சி.மணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

2. அக்கூட்டத்தில் கீண்கண்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

| | |
|---|---|
| 1.திரு.பெ.சு.திருவேங்கடம், சட்டமன்ற உறுப்பினர் | தி.மு.க. |
| 2.திரு.கே.எஸ்.அழகிரி, சட்டமன்ற உறுப்பினர் | த.மா.கா. |
| 3. திரு.எல்.சந்தானம், சட்டமன்ற உறுப்பினர், | அ.இ.பா.பிளாக். |
| 4. திரு.அப்துல் லத்தீப், சட்டமன்ற உறுப்பினர், | இ.தே.லீக் |
| 5.திரு.ஐ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர் | பா.ம.க. |
| 6.திரு.ஏ.எம்.கோபு | இ.க. |
| 7.திரு.ஜி.இராமகிருஷ்ணன் | இ.க.(மார்க்சிஸ்ட்) |
| 8.டாக்டர் வா.மைத்ரேயன் | பா.ஜ.க. |
| 9.திரு.பி.அய்யாக்கண்ணு | ஜனதாதளம் |

3. மாண்புமிகு அமைச்சர் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அவர்கள் கூட்டத்தை துவக்கி வைத்து பேசுகையில் திரு.ஐ.கணேசன், சட்டமன்ற உறுப்பினர், பா.ம.க.1 மற்றும் டாக்டர் கே.கிருஷ்ணசாமி, சட்டமன்ற உறுப்பினர் புதிய தமிழகம் கட்சி ஆகியோரும் குழுவிற்கு உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர், என்பதனை உறுப்பினர்க்கு தெரிவித்தனர். மேலும், மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு இது வரை வழங்கப்பட்டுள்ள உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவற்றினை தொகுத்து புத்தக வடிவில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் இது தவிர கூட்டத்தில் விவாதிக்கப்படுவதற்கான 5 பொருள்கள் குறித்தும் தொகுத்து புத்தக வடிவில் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதெனவும் உறுப்பினர்கள் அவற்றின் மீது தங்களது கருத்துக்களையும் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

4. நில சீர்திருத்தம், நில உச்சவரம்பு தலைப்பின்ன கீழ் குறிப்பிட்டுள்ளவற்றில், ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கின்ற அதே நேரத்தில் உபரி நில விநியோகம் குறித்து சட்ட திருத்தம் கொண்டு வர முடிவெடுக்க வேண்டும் என்றும் தமிழகத்தில் 20 லட்சம் ஏக்கர் நிலம் உபரியாக உள்ளது என்றும் இவ்வாறு உபரியாக உள்ள நிலங்களை கையகப்படுத்தியும், பஞ்சமி நிலங்கள் கைமாறி இருந்தால் அவற்றை கண்டறிந்து, அவைகளை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்க வேண்டுமென்றும், கால்நடை, பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை 7 அம்சங்களும் சரி என்றும் காய்கறி பதப்படுத்தும் நிலையம் தனியாரால் நடத்துவதில் அரசாங்கத்தில் சொல்லப்பட்டு வரும் நபர்களுக்கும் அவர்கள் காய்கறிகள் பதப்படுத்த உதவி செய்யுமாறு அந்த நிறுவனங்களை கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் திரு.ஜி.ராமகிருஷ்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (இடது சாரி) அவர்கள் கேட்டுக் கொண்டார்.

5. உபரி நிலங்களை எடுத்து கிராமத்தில் நிலம் இல்லாத விவசாயிகளுக்கு ஊராட்சித் தலைவர்களே அளிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்றும் முன்னதாக ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் இருந்த சமயத்தில் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் நிறைய துறைகள் இருந்தன (உதாரணமாக விவசாயம், கல்வி, கால்நடை பராமரிப்பு மற்றும் பல) அதே போல் திரும்பவும் அத்துறைகள் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் இயங்க வேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்றும் மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டம் முன்பிருந்தது போல் கூட்டப்பட வேண்டுமென்றும், மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் கிராம ஊராட்சி ஆகிய மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு தொடர்புகள் இல்லாமல் உள்ளது என்றும் ஒவ்வொன்னறிற்கும் தொடர்புகள் இருக்கும்படி

சட்டதிருத்தம் கொண்டு வர வேண்டும் என்றும் உறுப்பினர் திரு.எல்.சந்தாணம் (அ.இ.பா.பிளாக்) அவர்கள் கூறினார். இதற்கு ஊரக வளர்ச்சித் துறை செயலாளர், மாவட்ட வளர்ச்சி மன்ற குழு தற்சமயம் கலைக்கப்பட்டு விட்டது என்றும், அதற்கு பதிலாக மாவட்ட திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டுள்ளதெனவும், இதற்கு விதிகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும், அவ்வாறு விதிகள் ஏற்படுத்தப்பட்டவுடன் இந்த குழு எல்லா மாவட்டங்களிலும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என்று கூறினார்.

6. சிறு விவசாயியா அல்லது குறு விவசாயியா என்பது பற்றி ஊராட்சித் தலைவரே முடிவு செய்வதற்கு அவருக்கும் அதிகாரம் அளிக்கப்படவேண்டுமென்றும் மேலும் வருமான சான்றிதழ், சாதி சான்றிதழ் நில உச்ச வரம்பு ஆகியவற்றிற்கான சான்றிதழ்களை ஊராட்சித் தலைவர்களே அளிப்பதற்கு அவர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டுமென்றும் கிராமப்புற ஆக்கிரமிப்புக்களை அகற்ற வருவாய்த்துறை அதிகாரிகள், மற்றும் காவல்துறையனர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் ஊராட்சித் தலைவரே செய்வதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்று திரு.அய்யாக்கண்ணு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

7. மாவட்ட திட்டக்குழுவிற்கு மாவட்ட ஆட்சித்தலைவரே தலைவராக நியமித்தற்கு பதிலாக மாவட்ட ஊராட்சித் தலைவரே தலைவராக இருக்க வேண்டும் என்று வலியிறுத்தினார்.

வேளாண்மைச் சார்ந்த விரிவாக்கம் உள்ளடங்களாக வேளாண்மை, நில சீர்திருத்தம் நில உச்சவரம்பு செயல்படுத்துதல், கால்நடை பால்பண்ணை மற்றும் கோழிப்பண்ணை, மீன்வளம் மற்றும் உணவுப்பதப்படுத்துதல் உள்பட சிறுதொழில்கள்ள ஆகிய 5 இனங்கள் பற்றிய விவாதத்திற்காக வைக்கப்பட்ட பரிந்துரைகள் மீது உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் கருத்து தெரிவித்தார். இந்த கருத்திற்கிணங்க, மேற்கண்ட பொருள்கள் குறித்து விவாதத்திற்காக வைக்கப்பட்ட பரிந்துரைகளை ஒரு மனதாக ஏற்றுக் கொள்வதான உறுப்பினர்கள் தெரிவித்தனர். மீதமுள்ள இனங்களில் கண்டுள்ள பொருள்கள் குறித்து 15.5.98-ல் நடைபெறவிருக்கும் அடுத்தக் கூட்டத்தில் விவாதிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இந்த மீதமுள்ள பொருட்களின் மீது உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்ளை செயலாளர், ஊரக வளர்ச்சித் துறை, அவர்களுக்கு அடுத்து நடைபெறும் கூட்டத்திற்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி உறுப்பினர்களை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

8. சட்டத்திருத்தம் சம்பந்தப்பட்ட மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்த பொதுவான கருத்துக்கள் மீது விவாதத்தினை கடைசியில் வைத்துக் கொள்ளலாமென்று முடிவு செய்யப்பட்டது.

ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்.